



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



### அருள் மொழிகள்

பகவானுடைய அனுக்ரஹத்தைச் சம்பாதிப்பதற்கு முக்கியமான ஸாதனம் பக்தி ஆகும். பக்தி இருந்துவிட்டால் பிறகு வேறெந்த யோக்யதையும் ஒருவனுக்குத் தேவையில்லை. மனிதனுக்கு, பக்தி என்பது மிகவும் அவசியம், பக்தி பல வகையாக சாஸ்திரங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. பகவத் கதைகளைக் கேட்பது, அவன் புகழ் பாடுவது, அவனை எப்போதும் நினைப்பது, அவனது பாதஸேவை செய்வது, பூஜிப்பது, வணங்குவது, தாஸ்ய பாவத்துடன் ஸேவை செய்வது, நட்போடு பழகுவது, இறுதியில் தன்னையே அர்ப்பணிப்பது ஆகிய இவையெல்லாம் பக்தியின் வகைகள். இவற்றில் எந்த விதமான பக்தியை நாம் வளர்த்துக் கொண்டாலும் அது நமக்கு சிரேயஸ்ஸையே தரும். நமக்கு எந்த விதமான பக்தியும் இல்லை என்றால் அத்தகைய வாழ்க்கை எதற்கும் பயனில்லாத வாழ்க்கை ஆகிவிடும். மனிதப் பிறவி என்பது கிடைப்பதற்கு துர்லபமானது என்று எல்லோருக்கும் தெரியும். நம்முடைய சென்ற பிறவியில் நாம் செய்த எண்ணற்ற புண்ணிய கர்மாக்களின் விளைவாகத்தான் இப்போது நமக்கு மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது. அப்படியிருக்கையில், இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருவனுக்கு இருந்தால், பக்தி போன்ற சாதனங்களை ஒருவன் கடைப்பிடித்தல் மிக அவசியமாகும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

### நீதிசதகம்

नम्रत्वेन उन्नमन्तः परगुणकथनैः स्वान् गुणान् ख्यापयन्तः
स्वार्थान् संपादयन्तो, वित्तपृथुतर आरंभयत्नाः परार्थे ।
क्षांत्या एव आक्षेप रूक्षा अक्षरमुखान् दुर्जनान् दुःखयन्तः
सन्तः साश्चर्यचर्या जगति बहुमताः, कस्य न अभ्यर्चनीयाः ||

நம்ரத்வேன உன்னமந்த: பரகு3ணகத்2னை: ஸ்வான் கு3ணான் க்2யாபயந்த:
ஸ்வார்தா2ன் ஸம்பாத3யந்தோ, வித்தப்ரு'து2தர ஆரம்ப4யத்னா: பரார்தே2 .
க்ஷாந்த்யா ஏவ ஆக்ஷேப ரூக்ஷா அக்ஷரமுகா2ன் து3ர்ஜனான் து3:க2யந்த:
ஸந்த: ஸாஶ்சர்யசர்யா ஜக3தி ப3ஹுமதா:, கஸ்ய ந அப்4யர்சனீயா: ||

பணிவால் வாழ்வில் உயர்நிலை எய்தியவர்களும், பிறர் நற்குணங்களைப் பற்றிப் பேசி தனது குணங்களை வெளிப் படுத்துபவர்களும், பிறருக்கு உதவி செய்வதன் மூலம் தனக்கு வேண்டியதை அடைபவர்களும், கடும் சொற்கள் பேசி

## ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

நிந்திக்கும் துர்ஜனங்களை (துஷ்டர்களை) பொறுமையாலேயே வெல்லுகின்றவர்களும் ஆன ஆச்சர்யத்துக்குரிய ஆசரணை உடைய ஸத்புருஷர்கள் உலகத்தில் போற்றப்படுபவர்கள், எல்லோராலும் பூஜிக்கப்படுபவர்கள்.

## விதுர நீதி

द्वाविमौ कण्टको तीक्ष्णौ शरीर परिशोषिणौ । यश्चाधनः कामयते यच क्रुध्यत्यनीश्वरः ॥

த்$^{3}$வாவிமௌ கண்டகோ தீக்ஷ்ணௌ ஶரீர பரிஶோஷிணௌ |
யஶ்சாத$^{4}$ன: காமயதே யச க்ருத்$^{4}$யத்யனீஶ்வர: ||



பொருளற்றவன் தான் போகங்களை அனுபவிப்பதற்காக பல வஸ்துக்களை வாங்க விரும்புவதும் சக்தியற்றவன் கோபித்துக் கொள்வதும் இவ்விரண்டும் கூர்மையான முள் குத்தி துயரத்தை அளிப்பது போல் சரீரத்தை தபிக்கச் செய்துவிடும்.

द्वावेव न विराजेते विपरीतेन कर्मणा । गृहस्थश्च निरारम्भः कार्यवांश्चैव भिक्षुकः ॥

த்$^{3}$வாவேவ ந விராஜேதே விபரீதேன கர்மணா |
க்$^{3}$ரு'ஹஸ்த$^{2}$ஶ்ச நிராரம்ப$^{4}$: கார்யவாம்'ஶ்சைவ பி$^{4}$க்ஷுக: ||

குடும்பியானவன் முயற்சி இல்லாமலிருத்தலும் ஸன்யாஸியானவர் பல காரியங்களைச் செய்வதும், என்ற இந்த விபரீதமான காரியங்களால் இவ்விருவரும் பிரகாசிப்பதில்லை (ஸன்யாஸி பிரணவஜபம் செய்துகொண்டு பகவத் தியானம் செய்ய வேண்டும். குடும்பியான கிரஹஸ்தன் தன் ஸ்வ தர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டு யதிகளையும் பூஜிக்க வேண்டும்.) இப்படி இல்லாமலிருப்பது மாறுதல் எனக் கூறப்பட்டுள்ளது.

द्वाविमौ पुरुषौ राजन स्वर्गस्योपरि तिष्ठतः । प्रभुश्व क्षमया युक्तः दरिद्रश्च प्रदानवान् ॥

த்$^{3}$வாவிமௌ புருஷௌ ராஜன ஸ்வர்க$^{3}$ஸ்யோபரி திஷ்ட$^{2}$த: |
ப்ரபு$^{4}$ஶ்வ க்ஷமயா யுக்த: த$^{3}$ரித்$^{3}$ரஶ்ச ப்ரதா$^{3}$னவான் ||

ஓ அரசனே, இந்த இரண்டு புருஷர்கள் ஸ்வர்கத்துக்கும் மேலாகிய பிரம்மலோகம் முதலியவைகளில் இருப்பவர்களாக ஆகிறார்கள். அவர்களில் ஒருவர் பிரபுவாக இருந்து பொறுமையாக இருப்பவர். மற்றொருவர் தரித்திரனாக இருந்தும் நிரம்ப தானங்களைச் செய்பவர்.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

### நமது குருநாதர்

இந்த 35 வருடங்களில் மடத்தின் அபிவிருத்திக்காக அவர் செய்த சாதனைகளை வர்ணித்தால் நம்பக்கூட முடியாமல் இருக்கலாம். மடத்தின் நிர்வாக விஷயங்களிலோ, மடத்துக்கும் மடத்தின் சிஷ்யர்களுக்கும் உள்ள தொடர்பை பலப்படுத்துவதிலோ, மடத்துக்கு பல்வேறு இடங்களில் கிளைகளை நிறுவினதிலோ, வேதசாஸ்திரங்கள் தழைக்க மேற்கொண்ட காரியங்களிலோ, சுருங்கச் சொன்னால் ஜனங்களுக்கு ஆன்மிக நன்மை பயக்கும் எல்லாக் காரியங்களிலுமே நம் குருநாதர் அபார சாதனைகள் புரிந்திருக்கிறார்.



ஆரம்பத்திலிருந்தே சிருங்கேரி சாரதா பீடத்தின் ஆசார்யர்கள் சிஷ்யர்களை அனுக்ரஹிக்கும் பொருட்டு, யாத்திரைகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததே. ஆனாலும், நம் குருநாதர்போல் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை விரிவாகவும், அடிக்கடியும் யாத்திரைகளை மேற்கொண்டவர்கள் மிக அபூர்வமே. அது மட்டுமல்ல, ஆதிசங்கரருக்குப் பிறகு நேபாள இராஜ்ஜியத்துக்கு விஜயம் செய்த முதல் ஆம்னாய பீடாதிபதி நம் ஆசார்யர் ஒருவரே. 1957ல் நேபாளத்தில் மஹாசிவராத்திரியைக் கொண்டாடினார்கள். அதுவும் அன்றைய நேபாள அரசரின் பக்தி பூர்வமான பிரார்த்தனைக்கிணங்கியே அங்கு சென்றார். அழைக்காமல், அவராகவே அங்கு போய் நிற்கவில்லை.

நேபாள மன்னர் மஹேந்திரன், தன் தந்தை திரிபுவன இராஜாவுக்கு சிருங்கேரி ஆசார்யர் செய்த விசேஷ அனுக்ரஹத்திற்கு நன்றி செலுத்தும் வகையில் நம் ஆசார்யரை நேபாளத்திற்கு வருகை தரும்படி மிகுந்த பக்தி ஶ்ரத்தையுடன் பிரார்த்தித்தார். 1951ல் திரிபுவன மன்னருக்கு ஒரு பெரும் கஷ்டம் விளைந்தது. அதன் விளைவாக அவ்வரசன் பாரதம் வந்து அக்ஞாதவாசம் செய்ய நேரிட்டது. அச்சமயம் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அந்தர்முகமாக இருந்தபோதிலும், விசேஷ ஸ்ரீமுகம் ஒன்றை திரிபுவன மன்னருக்கு அனுப்பச் செய்து, இராஜ்ஜியத்தைத் திரும்ப அடைவதற்கு ஸ்ரீ சாரதா சந்திரமௌலீஸ்வரரும் ஸ்ரீ பசுபதிநாதரும் அருள் புரிவார்கள் என்று

அனுக்ரஹித்தார். அதை மனதில் கொண்டுதான் மன்னர் மஹேந்திரன் நம் ஆசார்யரிடம் மிகுந்த பக்தி செலுத்தி ஸ்ரீ பசுபதிநாதரின் விசேஷ தரிசனத்தைச் செய்வித்தார்.

நம் ஆசார்யர் 1956ல் தம் முதல் யாத்திரையை ஆரம்பித்து கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் ஆகிய இந்த நான்கு தென் பிரதேசங்களிலும் 6 வருட காலம் தொடர்ந்து யாத்திரை செய்தார்.



மீண்டும் 1964ல் தெற்கு வடக்குப் பிரதேசங்களிலும் தொடர்ந்து நான்கு வருடங்கள் யாத்திரை செய்தார்கள். இது அவருடைய இரண்டாவது பெரிய யாத்திரையாகும். அநேக இடங்களில் ஸ்ரீமடத்தின் கிளைகளை நிறுவினார்கள். ஸ்ரீ சாரதாம்பாள், ஸ்ரீ சங்கர பகவத்பாதர் மூர்த்திகளையும் அநேக இடங்களில் பிரதிஷ்டாபனம் செய்தார்கள். பாடசாலைகளையும் மற்றும் அநேக தர்ம காரியங்களையும் துவக்கி வைத்தார்கள். பெங்களூரில் இயங்கி வரும் சாஸ்திர பாடசாலையுடன் ஒரு வேத பாடசாலையையும் இணைத்தார்கள்.

(ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாசுவாமிகள் (சிருங்கேரி), ஸ்ரீ விஷ்வேஷ தீர்த்தர் (ப்ரஜாவார் மடம்), வித்யமண்யா தீர்த்தர் (பலிமர் & பண்டரகேரி மடம்)

நூறு வருடங்களாக இயங்கி வரும் சிருங்கேரி பாடசாலையின் அபிவிருத்திகளை யாவரும் அறிவர். அதே போல் ஸம்ஸ்கிருதம் தழைக்க வேண்டி “ஸுரஸரஸ்வதி ஸபா” என்ற நிறுவனத்தையும் ஸ்தாபித்து, வருடத்துக்கு இருமுறை பரீக்ஷைகள் நடத்தி, இதுவரை 6000 மாணவர்களை தேர்ச்சி அடையச் செய்திருக்கிறார்கள்.

(தொடரும்….)

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# பூமி ஸூக்தம்

**(அதர்வ வேதம் 12.1)**
விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்



5. எழும்போதும், உட்காரும்போதும், நிற்கும்போதும், உலவும்போதும் வலது மற்றும் இடது கால்களால் பூமியில் உதைக்காமல் இருப்போம்!

6. பூமித் தாயே, உன்னைத் தோண்டி எதை நட்டாலும் அது விரைவில் வளரட்டும்; தூய்மைப்படுத்துபவளே, உனது மர்மப் பகுதிகளையோ இதயப் பகுதிகளையோ சேதப்படுத்தாமல் இருப்போமாக!

7. பூமியின்மீது எந்தக் கிராமங்கள், எந்தக் காடுகள், எந்தச் சபைகள், எந்தப் போர்கள், எந்தக் கூட்டங்கள் உள்ளனவோ, அந்த இடங்களில் எல்லாம் உனக்கு இனிமையானவற்றையே பேசுவோம்.

8. பூமித்தாயே, என்னை மங்கலத்துடனும் நிலைபேற்றுட னும் திகழச் செய்வாய். ரிஷியே, விண்ணுலகுடன் என்னை இயைபுடன் இருக்கச்செய்து செல்வத்தையும் ஐசுவரியத்தையும் தருவாய்!

பூமி ஸூக்தம் முற்றும்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 1. பகுத்தறிவு (விவேகம்)

விவேகம்-வேதாந்த சாஸ்திரத்தின்படி விளக்கம்

இதுவரை, “விவேகம்” என்ற சொல்லிற்கு “எது சரி, எது தவறு”, “எது செய்யத் தகுந்தது, எது செய்யத் தகாதது" என்று பொருள் கொண்டு இக்குணம் ஆசார்யாளிடம் எப்படி சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வெளிவந்தது என்பதை அவரது வாழ்வில் நடந்த சில சம்பவங்களின் வாயிலாகக் கூறினோம். இனி, "விவேகம்" என்ற சொல்லிற்கு வேதாந்த சாஸ்திரம் கூறும் பொருளைப் பார்ப்போம்.

வேதாந்த சாஸ்திரத்தில் "விவேகம்" என்ற சொல்விற்குக் குறிப்பான பொருள் உண்டு. நித்யத்திற்கும் அநித்யத்திற்கும் உள்ள வேறுபாடே "விவேகம்" என்று வேதாத்தம் கூறுகிறது. "நித்யம்" என்பதற்கு எப்பொழுதும் உள்ளது" என்று பொருள்; அதற்கு மாறாக "அநித்யம்" என்பது அழியக்கூடியதைக் குறிக்கிறது. இதுவரை "விவேகம்" என்றால் “இது சரி”, ""அது தவறு" என்ற பாகுபாடு என்று கூறினோம். ஆனால் வேதாந்த சாஸ்திரமோ "இது நித்யம்", "அது அநித்யம்” என்ற பாகுபாட்டை "விவேகம்" என்று கூறுகிறது. இந்த இரு விளக்கங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன என்ற கேள்வி எழலாம். இந்த கேள்விக்கு விடை சங்கர பகவத்பாதரால் இயற்றப்பட்ட "விவேக சூடாமணி" என்ற நூலில் உள்ளது.

ब्रह्म सत्यं जगन्मिथ्येत्येवंरूपो विनिश्चयः । सोऽयं नित्यानित्यवस्तुविवेकः समुदाहृतः ॥

(பிரம்மம் ஸத்யம், ஜகத் (உலகம்) தவறான தோற்றமே' என்ற உறுதிப்பாடு 'நித்ய-அநித்ய வஸ்து விவேகம்' - நித்யமான வஸ்துவையும் அநித்யத்தையும் பகுத்தறிதல் என்று கூறப்படுகிறது.)

இந்நூலிற்கு உரை எழுதிய ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்,

“பிரம்பம் ஸத்யம், ஜகத் தவறான நோற்றம் (மித்யை) என்ற அறிவே நித்ய-அநித்ய வஸ்து விவேகம் என்று பகவத்பாதர் பொருள் கூறுகிறார். ஏனென்றால், ஒருவனுக்கு பிரம்மம் நித்யம், ஜகத் (உலகம்) அநித்யம் என்ற திடமான அறிவு இருந்தாலும் பரிபூரணமான வைராக்யம் ஏற்படுவதில்லை; (அவன்) தாற்காலிகமான சுகங்களை நாடுகிறான். உலகத்தை மித்யை உலகத்தை மித்யை (தவறான தோற்றம்) என்று வலியுறுத்திக் கூறுவதன் காரணம், தவறான


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)


தோற்றத்தை ஒருவரும் நாடுவதில்லை என்பதே. ராஜ்யத்தை விரும்பும் எவரும் கனவில் தோன்றும் ராஜ்யத்தினால் திருப்தி அடைவதில்லை ..."

என்று இந்த சுலோகத்தின் பொருளை விளக்குகிறார். எனவே, தவறான தோற்றமான உலகத்தையும் அதில் உள்ள தாற்காலிகமான இன்பங்- களையும், உண்மையானதும் நித்யமானதுமான பரம்பொருளையும் பகுத்தறிவதே விவேகம் எனப்படும். இப்படிப்பட்ட விவேகம் ஆசார்யாளிடம் சிறு வயதிலேயே அமைந்திருந்தது என்பது தெரிய வருகிறது:

"... ராமா சாஸ்திரிகளின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள தெருவிலோ, அல்லது "சிக்கலால்பாக்" என்ற முனிஸிபல் உல்லாச இடத்திலோ, மூன்று தெருக்களின் குழந்தைகளும் ஸாதாரணமாக விளையாடுவது வழக்கம். விளையாட்டு முடிந்ததும், குழந்தைகள் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு பேசுவது வழக்கம். அப்போது ஸ்ரீனிவாஸர் தன் மனதில் ஆழப்பதிந்திருந்த எண்ணமான 'நான் ஸந்யாஸியாகப் போகிறேன்" என்பதை வெளியிட்டார். இது விளையாட்டு என்று மற்ற பையன்கள் எண்ணினார்கள். ... அவர்களில் சிலர், 'ஸந்யாஸியாக ஆவதனால் என்ன ப்ரயோஜனம் உண்டு! மஹாராஜாவாக ஆனாலும் மேன்மை உண்டு' என்றனர். அதற்கு ஸ்ரீனிவாஸர், 'அப்படி எண்ண வேண்டாம்; மஹாராஜாவாக ஆவதனால் சாச்வத ப்ரயோஜனம் என்ன ஏற்படும்? அரசன், அரசாங்கத்தின் தலைமையில் இருக்கும் வரை தான் ஸுகத்தை அனுபவிக்க முடியும். இதற்கு முடிவு உண்டு. ஆனால் ஸந்யாஸியானால் முடிவில்லாமல் த்யானம் செய்து கொண்டு இருக்கலாம். கவலையே இருக்காது, ஈச்வரனைக் காணும் வரை தடையின்றி த்யானம் செய்ய ஸந்தர்ப்பம் கிடைக்கும். நான் என்றைக்கும் காப்பாற்றப்பட்டவனாவேன்' என்றார். இதுமுதல் ப்ரதி தினமும் இந்த விஷயமே சிறுவர்களின் பேச்சுக்குத் தலைப்பு விஷயமாக ஆகிவிட்டது. ஸ்ரீனிவாஸரின் எண்ணத்தில், 'மனிதனுக்கு அதிக ஆசை கூடாது' என்பதும், 'தன்னுடையதல்லாததில் விருப்பம் கொள்வது தவறு' என்பதும் தான் மேலோங்கி இருந்தது...




(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 2
### பொறுமை

பிரஹத்யும்னன் என்ற அரசன் ஒரு பெரிய யாகம் செய்ய உத்தேசித்துத் தன்னுடைய புரோஹிதரான ரைப்யருக்குச் சொல்லி அனுப்பினான். உடனே ரைப்யர் தன் புத்ரர்கள் இருவரையும் அனுப்பினார். அந்த யாகமத்தியில் ஒரு நாள் இரவு தகப்பனாரைப் பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்று இளைய குமாரனான பராவஸு ஆசிரமத்திற்கு வந்து கொண்டிருந்தான். அங்கே ஏதோ மிருகம் ஸஞ்சரிப்பதாகத் தெரிந்து தன் கையிலுள்ள கம்பினால் அடித்தான். ஸமீபம் போய்ப் பார்க்கும்போது தன் தகப்பனார்தான் குளிருக்காக ஒரு மான்தோலைப் போர்த்திக்கொண்டிருந்தாரென்று தெரிந்துகொண்டான். அவருக்குப் ப்ராணன் போய்விட்டபடியால் அவருக்கு ஸம்ஸ்காரம் செய்துவிட்டு அரசனுடைய யக்ஞசாலைக்குத் திரும்பி வந்துவிட்டான். அங்கே தன் தமையனாரிடத்தில் "ஏதோ மிருகம் என்று நினைத்து நம் தகப்பனாரைக் கொன்றுவிட்டேன். தெரியாமல் செய்தபோதிலும் அதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டியது அவசியம். ஆனாலும் இந்த யாகத்தை மேல் நடத்த உன்னைவிட எனக்குத்தான் தெரியுமாதலால் நான் இதை கவனித்துக்கொள்கிறேன். நீ போய் எனக்காக ஸங்கல்பம் செய்துகொண்டு இந்த பாப நிவிருத்திக்காகச் செய்யவேண்டிய பிராயச்சித்தத்தைச் செய்துவிட்டுத் திரும்பி வா என்று சொன்னான். உடனே தமையன் அர்வாவஸுவும் அப்படியே போய் பிராயச்சித்தாதிகளையெல்லாம் செய்துவிட்டுப் பின்னால் வந்தான். ஆனால் அவன் தம்பி அரசனிடம் "இதோ வருகிறாரே, இவர் பிரஹ்மஹத்தி செய்தவர். இவரை உள்ளே விட்டால் யாகமே நிஷ்பலனாகிவிடும்" என்று சொன்னவுடன் அர்வாவஸுவை வெளியில் தள்ளிவிட்டார்கள். "நான் ஒரு பிராஹ்மணனையும் இம்சை செய்திருப்பது கிடையாது. வாஸ்தவத்தில் பிரஹ்மஹத்தி செய்தது அவன் தான். அந்தப் பாபத்திலிருந்து நான் அவனைக் காப்பாற்றிக் கொடுத்தேன்" என்று எவ்வளவு சொல்லியும் பலிக்கவில்லை.



*Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.*

~ Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

உடனே அர்வாவஸு வெறுப்புடன் இனி தன்னுடைய ஆயுள் நாளைத் தபஸ்ஸிலேயே கழிப்பது என்ற தீர்மானத்துடன் காட்டிற்குப் போய் தபஸ் செய்துவந்தான். இவனுடைய தபஸ்ஸினால் ஸந்தோஷமடைந்த ஸூர்யன், அக்னி முதலிய தேவதைகள் பிரத்யக்ஷமாகி வரம் கொடுக்க ஸித்தமாக இருந்தார்கள். இவன் தனக்கு யாதொன்றும் தேவையில்லையென்று சொல்லியும்கூட அவர்கள் ஏதேனும் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதன் பேரில் இவன் “என் தகப்பனார் மறுபடியும் வரட்டும். தன்னை என் தம்பி கொன்றான் என்பதை அவர் மறக்கட்டும். என் தம்பிக்கும் எல்லாப் பாபமும் போகட்டும். என் தகப்பனாரால் ஏவிவிட்ட ராக்ஷஸனால் கொல்லப்பட்ட யவக்ரீதனும் உயிருடன் திரும்பி வரட்டும். புத்ரசோகத்தினால் பிராணனைவிட்ட பரத்வாஜரும் மறுபடியும் பிழைக்கட்டும். இந்த இரண்டு ஆசிரமங்களில் உள்ளவர்கள் முன்போல் ஸ்நேஹமாய் ஸந்தோஷமாய் இருக்கட்டும்" என்று கேட்டுக்கொண்டான். அப்படியே தேவதைகளும் வரம் கொடுத்து விட்டார்கள்.

இதிலிருந்து தனக்கு ஏற்பட்ட தீங்கிற்குக் காரணமாயிருந்தவர்களிடத்தில் ஒருவித மனஸ்தாபமுமில்லாமல் அவர்களுடைய க்ஷேமத்தையே கோறின அர்வாவஸு என்பவன் க்ஷமைக்கு நிதர்சனமாக இருந்திருக்கிறான்.

உயிருடன் எழுந்திருந்த யவக்ரீதன் அந்த தேவதைகளைப் பார்த்து “இந்திரனுடைய அனுக்ரஹத்தினால் எனக்கு வேதவிஷயமான அறிவு ஏற்பட்டிருக்கும்போது ரைப்யர் என்னை எப்படி ஹிம்ஸிக்க முடிந்தது?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "குருஸேவை செய்யாமல் கிடைத்த வேதமானது உன்னை ரக்ஷிக்காது. அது பலிக்க வேண்டுமேயானால் குருவை அடைந்து அவருடைய பாதஸேவை செய்து கிரமப்படி வித்யாப்யாஸம் செய்யத்தான் வேண்டும்” என்று சொன்னார்கள். இந்த உபதேசத்தைக் கேட்டு அவனும் குருவைத்தேடி நாற்பத்தெட்டு வருஷகாலம் குரு சுச்ரூஷை செய்து வேதபாரங்கதராக ஆனான் என்றும் கண்டிருக்கிறது.

இந்தக் கதையிலுள்ள ஒவ்வொரு அம்சங்களிலிருந்தும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். ஆகையினால் இதை விவரிக்கவில்லை.

(தொடரும் ...)

மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

पुराणवस्त्राणि न धारयामि नवाम्बराण्येव तु धारयामि ।
इति प्रबोधाय जनस्य नूनं नवाम्बराण्येव दधाति वाणी ॥
புராணவஸ்த்ராணி ந தா⁴ரயாமி நவாம்ப³ராண்யேவ து தா⁴ரயாமி |
இதி ப்ரபோ³தா⁴ய ஜனஸ்ய நூனம்' நவாம்ப³ராண்யேவ த³தா⁴தி வாணீ||

பழைய ஆடைகளை நான் உடுத்துவதில்லை. புதிய ஆடைகளையே உடுத்துகிறேன் என உலகிற்குக் காட்ட வாணீ புதிய ஆடைகளையே உடுத்துகிறாள்.(8)


भवन्तु विजरामराः पदसरोजनम्रा इति प्रकृष्टदयया विधेः सखि सरोजतुल्यानने ।
करस्थकलशामृतं नतजनाय दातुं स्वयं महार्हमणिनिर्मितं चषकमम्ब धत्से किमु ।।
ப⁴வந்து விஜராமரா: பத³ஸரோஜனம்ரா இதி ப்ரக்ரு'ஷ்டத³யயா விதே⁴: ஸகி² ஸரோஜதுல்யானனே |
கரஸ்த²கலஶாம்ரு'தம்' நதஜனாய தா³தும்' ஸ்வயம்' மஹார்ஹமணிநிர்மிதம்' சஷகமம்ப³ த⁴த்ஸே கிமு ||

தாயே ! பிரும்மாவின் சினேகிதியே ! தாமரையை ஒத்தமுகம் உள்ளவளே ! தன் திருவடியை வணங்கியவர்கள் சிறப்பு மிக்க கருணையால், மூப்பும் மரணமுமற்றவராகட்டும் என தன்னை வணங்கிய மக்களுக்குக் கையிலுள்ள கலசத்து அமுதத்தைத் தானே வழங்க, விலையுயர்ந்த ரத்னத்தாலான கிண்ணம் வைத்துள்ளாயோ? (9

त्वक्ष्यामि नैव रागं कालत्रितयेऽपि नम्रवर्गेषु ।
इति बोधनाय वाणी रक्तसुमानां त्रयं धत्ते ।
த்வக்ஷ்யாமி நைவ ராக³ம்' காலத்ரிதயே(அ)பி நம்ரவர்கே³ஷு |
இதி போ³த⁴னாய வாணீ ரக்தஸுமானாம்' த்ரயம்' த⁴த்தே ||

தன்னை வணங்கியவரிடமுள்ள ராகத்தை (பற்றை செந்நிறத்தை) முக்காலத்திலும் விடவே மாட்டேன் எனத் தெரிவிக்க மூன்று செந்நிறப்பூக்களை வாணீ கொண்டுள்ளாள். (10)


(தொடரும்…)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

### (ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

அத்தியாயம் : நான்கு
சைத்ர மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும்
பலன்: கலிகன்-உத்தங்கன் வரலாறுகள்

இந்த விஷயத்தில் (சைத்ர மாத இராமாயணம் படிப்பதில்), ஒரு பழைய வரலாற்றை ஆன்றோர்கள் கூறுகிறார்கள். அந்த வரலாற்றைப் படிப்பவர்கள்-கேட்பவர்களின் எல்லாப் பாவங்களும் நசித்துப் போகின்றன. முன்பொரு கலியுகத்தில், கட்டுப்பாடுகள் இல்லாமல் திரிந்த கலிகன் என்பவன் இருந்தான். பிற பெண்களையும் பிறர் சொத்துக்களையும் அபகரிப்பதையே தொழிலாகக் கொண்டவன். எப்போதும் பிறரைப் பற்றிக் குறை சொல்லிக் கொண்டேயிருப்பான்; எல்லாப் பிராணிகளையும் துன்புறுத்துவான். நூறு. ஆயிரக்கணக்கில் அந்தணர்களையும் பசுக்களையும் கொன்று போட்டிருக்கிறான்.

தேவாலய சொத்துக்களையும், பிறருடைய செல்வத்தையும் பறிப்பதில் எப்போதும் ஈடுபட்டிருந்தான். மாபெரும் பாவங்களை அவன் செய்து விட்டிருந்தான். அவன் செய்த பாவங்களை கோடி வருஷங்கள் எண்ணினாலும் முடிவு காண முடியாது. மகாபாவியும், பிராணிகளுக்கு எமன் போன்றவனுமான அவன், ஒரு சமயம். எல்லா செல்வச் செழிப்புக்களும் நிறையப் பெற்ற ஸௌவீரம் என்ற பட்டணத்தை அடைந்தான். உயர்ந்த ஆடை - அணிகலன்கள் அணிந்த யுவதிகள்: சுத்தமான நீர் நிரம்பிய தடாகங்கள்: பல்வகைப் பொருள்களை விற்கும் விதவிதமான கடைகள் முதலியவற்றால், அந்த நகரம் பொலிவுடன் விளங்கிற்று. அந்த நகரத்தின் பூஞ்சோலையில், பகவான் கேசவனுடைய



(இராமனுடைய) திருக்கோவில் விளங்கிற்று.

அந்த ஆலயத்தின் கோபுரங்களில் தங்கக் கலசங்கள் இருப்பதைப் பார்த்து, அந்தத் தீயவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். 'இங்கேயுள்ள ஏராளமான தங்கத்தைத் திருடிக் கொண்டு செல்வேன்' என்று நிச்சயித்துக் கொண்டான். திருடிக் கொண்டு சென்றுவிடுவது என்று நிச்சயம் செய்து கொண்ட அவன், அந்தத் திருக்கோவிலுக்குள் சென்றான். அங்கே அமைதியானவரும், இறைத்தத்துவங்களின் உண்மையை உள்ளபடி தெளிவாக அறிந்தவரும், திருமாலின் சேவையில் மனங்குவிந்திருப்பவரும், தவத்தின் நிலைக்களனும். தனியாக இருந்தவரும். கருணைமிக்கவரும், பொருட்பற்றில்லாதவரும். தியானத்தில் ஆர்வமுடையவருமான உத்தங்கர் என்ற அந்தணரைப் பார்த்தான். அவரை அங்கே பார்த்ததும், 'இவர் என் திருட்டுக்குத் தடையாக இருக்கிறாரே?' என்று எண்ணினான். (அதனால், சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.) நட்டநடுநிசியில் தெய்வத்தின் சொத்துக்களை ஒன்று திரட்டினான். (உத்தங்கர், தான் திருடியதை வெளியே சொல்லி விடுவாரே? என்பதால்.) அவரைக் கொல்ல விரும்பி. அவர் மார்பில் தன் காலை வைத்து அழுத்தி, கழுத்தைத் தன் கையினால் திருகி, உடைவாளை எடுத்து அவரைக் கொல்ல முற்பட்டான். தன்னைக் கொல்வதற்கு முடிவு செய்துவிட்ட அவனைப் பார்த்து உத்தங்கர் கேட்கிறார்.

உத்தங்கர் கேட்கிறார்-"ஐயனே! அண்ணலே! நல்லவரே! குற்றமேதும் செய்யாத என்னைக் கொலை செய்ய வீணாகத் தாங்கள் முயல்கிறீர்கள். நீசரே! நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்? - என்பதைச் சொல்லுங்கள். குற்றம் செய்தவனைத் தேடிக் கண்டுபிடித்து, அவனுக்குத் தண்டனை கொடுப்பது என்பது உலக வழக்கம். நல்லவரே! குற்றமே செய்யாதவனை நற்பண்புள்ள மனிதர்கள் வீணாகத் துன்புறுத்துவதில்லை.

அமைதியான மனத்தையுடைய நல்லோர்கள், தம் பகைவர்களிடமும் அறிவிலிகளிடமும்கூட சில நற்குணங்கள் இருப்பதை எண்ணிப் பார்த்து, அவர்களிடமும் பகைமை பாராட்டுவதில்லை.

(தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்